செய்தி வெளியீடு எண்: 288 நாள்: 29.05.2013

# செய்தி

## மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி தமிழ்நாடு முதலமைச்சர்அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் படி செயல்படும் சிட்கோ செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்.

-----

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (29.5.2013) மாலை 3.30 மணியளவில் சென்னை கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை சிட்கோ தலைமை அலுவலக வளாகத்தில் குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப மோகன் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வு கூட்டத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில் சிட்கோ நிறுவனத்தை பொறுத்தமட்டில், நிலமதிப்பு நிர்ணயம், நில உரிமை மாற்றம், ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாகவுள்ள இடங்கள் குறித்து விரைவில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், தொழிற்பேட்டை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் மலுமிச்சம்பட்டி, திருவெறும்பூர் ஆகியவற்றிற்கு மானியம் பெறுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பியுள்ள பிரேரணைகள் மீது விரைவில் தக்க ஆணை பெற துறை அலுவலர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் பேசுகையில் ,19 இடங்களில் 1527.95 ஏக்கர் நிலத்திற்கு நில உரிமம் மாற்றும் பணிகள், 2012–13 மற்றும் 2013–14 ஆகிய ஆண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிலுவையில் உள்ள திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் நில வங்கி ஏற்படுத்தும் பணிகள், நீலகிரி மாவட்டத்தில் தேயிலை குழுமம் அமைக்கும் பணிகள் ஆகிய இனங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தி குறிப்பிட்ட காலவரைக்குள் பணிகளை விரைந்து முடித்திட வேண்டுமென கேட்டுக்கொண்டதுடன். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு தொழில்கள் முக்கிய அங்கம் வகிப்பதால் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்கள் நமது துறைக்கு முக்கியத்துவம் அளித்து நல்ல பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களின் எண்ணத்திற்கேற்ப, அவற்றினை உடனடியாக நிறைவேற்றும் வகையில், நாம் மிகுந்த அக்கறையுடனும், அர்பணிப்போடும் செயலாற்றி மாண்புமிகு புரட்சித்தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப, தொலைநோக்கு திட்டம் 2023 வெற்றி பெறுவதில், நமது ஒத்துழைப்பும் இடம்பெறும் வகையில் பணியாற்றிட வேண்டு என கேட்டுக் கொண்டார்.

இவ்வாய்வின் போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்கள் துறையின் அரசு செயலாளர் திரு.கி. தனவேல் இ.ஆ.ப., தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப.,மற்றும் பலர் உடன் இருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**